**செய்தி வெளியீடு எண்: 010** **நாள் : 08.01.2015**

# செய்தி வெளியீடு

தமிழக மக்கள் உழவர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை தங்கள் சொந்த மண்ணில் கொண்டாடிடும் வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில், கடந்த மூன்றாண்டுகளாக அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் சிறப்புப் பேருந்துகள் சீரிய முறையில் இயக்கப்பட்டு பொதுமக்களிடையே பெரும் வரவேற்பினை பெற்று வந்துள்ளது. அவ்வாறே இவ்வாண்டும் தமிழக மக்கள் பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடிடும் வண்ணம் தங்கள் சொந்த ஊர்களுக்கு எந்தவித சிரமமும் இன்றி சௌகரியமாகச் சென்று வர, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் சிறப்புப் பேருந்துகளை இயக்கவும், சிறப்பான வசதிகளை செய்து தரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, 2015–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையையொட்டி அனைத்து மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் மாநிலத்தின் முக்கிய ஊர்களுக்கு கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் இருந்து இம்மாதம் 10–ஆம் தேதி 600 சிறப்பு பேருந்துகளும், 11–ஆம் தேதி 470 சிறப்பு பேருந்துகளும், 12–ஆம் தேதி 720 சிறப்பு பேருந்துகளும், 13–ஆம் தேதி 1408 சிறப்பு பேருந்துகளும், 14–ஆம் தேதி 1457 சிறப்பு பேருந்துகளும், மொத்தம் 4655 சிறப்பு பேருந்துகளும் மற்றும் 15–ஆம் தேதியன்று பயணிகளின் தேவைக்கேற்பவும் சிறப்பு பேருந்துகள் இயக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று, சென்னையைத் தவிர்த்து மாநிலம் முழுவதிலும் இருந்து 10–ஆம் தேதி 300 சிறப்பு பேருந்துகளும், 11–ஆம் தேதி 400 சிறப்பு பேருந்துகளும், 12–ஆம் தேதி 500 சிறப்பு பேருந்துகளும், 13–ஆம் தேதி 595 சிறப்பு பேருந்துகளும், 14–ஆம் தேதி 800 சிறப்பு பேருந்துகளும், மொத்தம் 2595 சிறப்பு பேருந்துகள் இயக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 10–ஆம் தேதி முதல் 14–ஆம் தேதி வரை 7250 சிறப்பு பேருந்துகள் இயக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், பொங்கல் பண்டிகையினை உறவினர்கள், நண்பர்களுடன் கோலாகலமாக கொண்டாடிவிட்டு ஊர் திரும்பிட வசதியாக இதே அளவிலான பேருந்துகளை 16–ஆம் தேதி முதல் 19–ஆம் தேதி வரை இயக்கிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொங்கல் பண்டிகையையொட்டி 300 கி.மீ தூரத்திற்கு மேல் இயக்கப்படும் சிறப்புப் பேருந்துகளுக்கு, இணையதள பயணச் சீட்டு முன்பதிவு முறையில், **Online Ticket Reservation System www.tnstc.in** என்ற இணையதள மூலம், பயணச்சீட்டு முன்பதிவு

செய்யும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது தவிர, கணினி மூலம் உடனடி தள முன்பதிவு செய்யும் வகையில் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் 25 சிறப்பு முன்பதிவு மையங்கள் செயல்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஜனவரி 16 முதல் 18 வரை சென்னை மற்றும் புறநகர் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சுற்றுலா பொருட்காட்சி, அண்ணா சதுக்கம், காந்தி மண்டபம், வி.ஜி.பி., முட்டுக்காடு, கோவளம், எம்.ஜி.எம்., மாமல்லபுரம், வண்டலூர் உயிரியல் பூங்கா, கிஷ்கிந்தா, குயின்ஸ் லாண்டு போன்ற பல்வேறு சுற்றுலா மையங்களுக்கு 250 சிறப்புப் பேருந்துகள் இயக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

பொங்கல் பண்டிகையையொட்டி, அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் பேருந்துகள் குறித்து சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திலுள்ள அரசு விரைவு போக்குவரத்துக் கழக அலுவலக தொலைபேசி எண். 24794709-க்கு பொதுமக்கள் புகார் தெரிவிக்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கை தமிழக மக்கள் அனைவரும் தங்கள் சொந்த ஊர்களில் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடிட வழிவகை செய்யும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**